# கட்டுரை

ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"

கூற்றுக்கு அமைய இப் பூமியில் உயர்திணையில் வைத்து எண்ணப்படுபவர்கள். மனித இனம் ஆறறிவுடையது. ஆறாவது அறிவு, பகுத்தறிவு எனப்படுகிறது. மனிதர்களால் விடயங்களை அறியவும், அவற்றைப் பேசவும் இயலும்; ஆன்மிக, ஒழுக்க வாழ்வு வாழ முடியும். அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை வாழ்க்கைப் பயன்களாக அவனி நிற்பவர்கள் மனிதர்களே ஆவர். மனிதர்கள் ஏனைய ஜீவராசிகளை விட நிச்சயம் உயர்ந்தவர்களே. அதனால் மனிதர்கள் உயர்திணையினர் ஆயினர்.

மனிதப்பிறவி என்பதன் பெரும் பயனே இறைவனின் திருவடியை சேர்வதான்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி
சேராதார்" குறள் - 10

அதிகாரம் - கடவுள் வாழ்த்து

அதாவது, மனிதன் தன்னுடைய நன்மைக்காகவும், மற்றவர்களின் நன்மைக்காகவும் உலகில் பிறந்திருக்கின்றான். தர்மத்தின் வழியில் தனக்குத் தானே மிகப் பெரிய நன்மைகளைத் தேடிக்கொள்வது ஆகும். இவ்வாறு மனிதன் தன்னைத் தானே உணரவும், நல்வழியில் பயணம் செய்யவும் மனித குணங்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றது. மனிதனின் சிறப்பு குணங்களாக நம்பிக்கை, தோயம், பொறுமை, நிதானம், நேர்மை, அடக்கம், பணிவு, விட்டுக்கொடுத்தல், உபசரித்தல், மன்னித்தல், இன்சொல் பேசுதல், பிறரின் கருத்துக்கு மதிப்பளித்தல் இவ்வாறு கூறிக்கொண்டே செல்லலாம்.

மனிதனின் சிறப்பு குணங்களில் நம்பிக்கை, மன்னிப்பு, பொறுமை என்பன பெரும் பங்கு வகிக்கின்றது. அவை கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக ஒருவர் முயற்சி செய்யாத

போதுதான் தோல்வி கிடைக்கிறது. ஒரு மனிதனோ அல்லது நாடோ நம்பிக்கை, தன்னம்பிக்கை இழந்தவுடனே அழிவு பெறுகிறது. நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை - கடவுளிடத்தில் நம்பிக்கை, இதுவே மனித மகிமையின் இரகசியமாகும்.

நம்பிக்கை என்பது ஒரு உளவியல் சார்ந்த அம்சமாகும். ஒருவர் அல்லது ஒரு அமைப்பு, ஒன்றின் மீது அல்லது ஒருவரின் மீது வைக்கும் கருத்தைப் பற்றி அல்லது கூடிய அறிவு போன்றவற்றின் அடிப்படையில் அதனை உண்மை என நம்பும் நிலையே நம்பிக்கை எனலாம். அது சரியானதாகவோ தவறானதாகவோ இருக்கலாம். உண்மையானதாகவோ உண்மையற்றதாகவோ கூட இருக்கலாம். நமக்கு துன்பம் ஏற்படும் போது உணர்ச்சி வசப்படாமலும், கோபம் கொள்ளாமலும் இருக்கும் மனநிலை பொறுமை ஆகும். இந்த குணமானது மனிதனை பல்வேறு உடல் நோய்களில் இருந்தும், மன நோய்களில் இருந்தும் பாதுகாக்கிறது. ஒருவருக்கு சிக்கலை ஏற்படுத்தியதற்கான வருத்தத்தின் வெளிபாடே மன்னிப்பு ஆகும். இது மனரீதியாக ஏற்படும் ஒர் அற்புத உணர்வாகும்.

விலங்கு நிலையில் இருப்பவனை பாமர மனிதன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பாமர மனிதனை பண்புள்ளவன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பண்புள்ள மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவது மதம். உலகில் பல மதங்கள் உள்ளன. இந்த மதங்களுக்கு இடையில் ஒற்றுமைகள், வேற்றுமைகள் உள்ளன.

"வணங்கும் துறைகள் பலபலவாக்கி" - நம்மாழ்வார் வாக்கு. எல்லா மதங்களும் ஒரே ஊற்றிலிருந்து தோன்றியவை. எல்லா மதங்களுக்கும் அடிப்படையில் ஆன்மிகம் விளங்குகின்றது. உலகிலுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் ஓர் இறைத்தத்துவம் இழையோடிக் கொண்டிருக்கிறது, பின்னிப் பிணைந்திருக்கின்றது. மத நல்லிணக்கத்தின் அடிப்படையே 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதேயாகும். போரும், பூசலும் எப்போதும் வெறுக்கத்தக்கது. உண்மையான மதம் எப்போதும் மக்களை ஒன்றுப்படுத்துவதாகவே இருக்கும்.

மதமாற்றம் என்பது சூழ்நிலைக்கேற்ப நன்மையாகவும், தீமையாகவும் இருக்கின்றது. இதெல்லாம் ஒருபுறம் இருக்க பண்டைய நாட்களில் அதாவது, பாமர மக்கள், நவீன பணப் பரிமாற்றத்திற்கு முன்பு பஞ்சம், பட்டினி, நோய் தாக்கங்கள், உலக அழிவுக்கான காரணங்கள் அதற்கான அறிகுறிகள் போன்றவற்றை கூறிச்சென்றுள்ளனர். இது மூடநம்பிக்கை என்ற கருத்தை முறியடித்து தற்போது உலகளாவிய ரீதியில் அனைவரையும் அச்சத்தின் பிடியில் சிக்கவைத்த கொரோனா (COVID-19) வைரஸானது புதுப்பெயர்களில் பல அலைகளாக மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையை புரட்டிப்போட்டு உள்ளது என்றுதான் கூறவேண்டும்.

கொரோனா தாக்கத்தை குறைக்கும் என்ற நம்பிக்கை ஊரடங்கு உத்தரவுகள், சுய தனிமைப்படுத்தல், பயணக் கட்டுப்பாடு போன்றவற்றின் மீதுள்ளது. இதனால் மக்கள் அன்றாட வாழ்க்கை நிலையை இழக்க வேண்டியுள்ளது. மாதசம்பளம் பெறும் ஊழியர்களைக் காட்டிலும், அன்றாடம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளிகள், வாடகை வாகன ஓட்டுனர்கள் மிகவும் துயரத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். வீட்டிலிருந்து வேலை (Work From home), நிகழ்நிலை கல்வி (Online Studies), நிகழ்நிலை வங்கிச் சேவை (Online Banking), நிகழ்நிலை வியாபாரம் (Online Shopping) என வீட்டினுள்ளேயே முடங்கிக் கிடக்கும்படியாக இன்றைய நாட்களை நாம் கடந்துக் கொண்டு, கொரோனா தாக்கத்திற்கு பல உயிர்களையும் தியாகம் செய்து கொண்டுதான் இருக்கின்றோம்.

கொரோனா மதங்களில் மட்டுமல்ல, மனித நம்பிக்கை மற்றும் ஏனைய குணங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலம் பற்றி சிந்திக்க முடியாத நிலையுடன், மற்றவர்களை காரணம் காட்டி, ஏன்? எதற்கு? என்ன? போன்ற கேள்விகளுக்கு விடைதெரியாமல் விழித்துக்கொண்டிருக்கின்றோம். உலக நடத்தை மற்றும் காலத்தின் மாற்றங்களும் மனித குணங்களை காட்டிலும் உலக, நாட்டு நடப்புகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஒருபுறம் முன்னோர்களின் வாய்மொழி வார்த்தைகளும், மத நம்பிக்கைகளும் பொய்ப் போகாமல் நடக்கின்றது. என்றாலும், ஒரு சிலரின் வாழ்க்கைப் பிரச்சினைகள்

இருந்தபோதிலும் காலம், பரம்பரை, அன்றாட நிகழ்வுகள், தனிப்பட்ட குணாம்சங்கள், இடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உலகில் பல சமயங்களும், பல சமயப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. எனினும், மதங்கள் சில கருத்துக்களில் இணைந்தும், சில கருத்துக்களில் முரண்படுபவையாகவும் உள்ளன. மதங்கள் தங்களுக்கு இடையில் கொள்ளும் முரண்பாடுகள் மதவாதம் அதாவது மதத்தின் பெயரால் மனிதச் சிந்தனைகளின் போக்கு தவறாகச் செயல்படுவது என்ற கருத்தை கூறுகின்றது.

உலக சகோதரத்துவ சமுதாயத்தை தோற்றுவிப்பது மதங்களின் நோக்கம் ஆகும். இதில் ஆண், பெண், நாடு, நிறம், இனம், மொழி போன்ற எந்த வேற்றுமைக்கும் இடமில்லை. எல்லோரும் எல்லா மதங்களையும் மதிப்பதுதான் உண்மையான ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும். எனினும் கூட சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு மதமாற்றம் ஏற்படுகின்றது. இது கட்டாய மதமாற்றம், சுய விருப்ப மதமாற்றம் எனவும் வேறுபடுகின்றது. ஒரு மதத்தின் தாற்பரியங்கள், நம்பிக்கைகள், பண்டிகைகள், விழாக்கள், சுய விருப்பு வெறுப்புக்கள் போன்ற சில காரணங்களினால் ஈர்க்கப்பட்ட நிலையில் சிலர் தானாகவே முன்வந்து தனக்கான மதத்தினை தேர்வு செய்கின்றனர். வறுமை, பணம், காதல் போன்ற பல காரணங்களைக் காட்டி கட்டாய மதமாற்றம் செய்வதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதும் அவசியமே.

ஒரு சில இடங்களில் வறுமையில் இருக்கும் மக்களை வறுமையில் இருந்து விடுபடுவதற்கான நம்பிக்கையையும், பணத்தினையும் காரணமாக கொண்டு மதமாற்றம் செய்வது நாம் அடிக்கடி கேள்விப்படும் விடயமேயாகும். ஜாதி, மதம், இனம், மொழி போன்ற பேதமின்றி எல்லோருக்கும் சரளமாக கிடைக்கும் மழை, வெயில், காற்றைப் போலவே காதலும் எல்லோருக்கும் பொதுவானது. ஆனால், சில இடங்களில் மேலே கூறப்பட்ட பேதங்களை கொண்டு ஏற்படும் காதல் 'திருமணம்' என்றும் நிலைக்கு வரும்போது பெண் அல்லது ஆணில் ஒருவர் குறிப்பிட்ட ஒரு மதத்தை குடும்பம், சமூகம், சுற்றச் சூழல் என்ற ரீதியில் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது.

Scanned with CamScanner

நோய் தாக்கங்கள் மற்றும் மரண வீத அதிகரிப்புகள் அதிலும், பெரியோர்களைக் காட்டிலும் சிசு மரண வீதம் அதிகரிப்பு நம்பிக்கை, தன்னம்பிக்கைக்கு அப்பாற்பட்டு மதம், கடவுள் என்றிருந்தால் ஏன் இவ்வாறான மோசமான நிலைகள் வருகின்றது? என்ற கேள்வியை முன்னிறுத்தி பொறுமைக்கும், மன்னிப்பிற்கும் கொடுக்கப்படும் தனித்துவங்களை முறியடிக்கின்றது.

காலத்தின் அசாதாரண நிலை, வேலையின்மை அதனால் ஏற்படும் மன உளைச்சல் பொறுமையை இழக்க வைத்து அதீத கோபம், முறையற்ற வார்த்தைகளை பிரயோகித்தல், கொலை, கொள்ளை, வீண் பழியிடுதல் கொடூர தண்டனைகளை விதித்தல் போன்ற காரணிகளை தோற்றுவிக்கின்றது. செய்யும் தவறுக்கு மதரீதியாக தண்டனை கண்டிப்பாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பினும் கூட தனக்கான இடத்தை தக்கவைத்துக்கொள்ள, குறுக்கு வழியில் முன்னேற்றம் அடைய தப்பு செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவதிலும் மும்முரமாக திகழ்கின்றனர், இங்கு மன்னிப்புக்கு இடமில்லை. யோகா, தியானம், மூச்சுப்பயிற்சிகள் ஏற்படும் மன உளைச்சல்களையும், தீவிர கோபத்தையும் குறைக்க சிறந்த வழியேயாகும். எனினும், சூழல், சமூகம் என்ன கூறும், மற்றையவர்கள் என்ன நினைப்பார்கள் என்று தன்னுடைய வாழ்க்கையை மதம், பொறுமை, நம்பிக்கை, மன்னிப்பு என்பவற்றைத் தாண்டி வேறொருவருக்காக, வேறு சூழலுக்காக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிர்ப்பந்தம் எழுகின்றது.

ஒரு மதம் அல்லது நம்பிக்கையோடு சார்ந்த மன்னிப்பு, பொறுமையைப் பற்றி சிந்திக்கும் வேளையில் இந்த கொரோனா காலம், முக்கியம் வகிக்கின்றது. இதனால் மத நிகழ்வுகள், விழாக்கள், திருமணம் போன்ற சுப நிகழ்வுகள் நிறுத்தப்பட்டுள்ளது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நபர்களைக் கொண்டே இடம்பெறுகின்றது. வீட்டிலிருந்தே வேலை, படிப்புடன் சேர்ந்து குடும்ப சுமைகள், பணப்பற்றாக்குறைகள் படிப்படியாக வளர்ந்து வருகின்றது. இதில் பொருள் தட்டுப்பாடு உதாரண-மாக பால்மா தட்டுப்பாடுகள், மருந்துகள் தட்டுப்பாடு, சீனி மற்றும் எரிபொ-ருள் தட்டுப்பாடு என்பவற்றை கூறலாம். எதுவெனினும், பொருள்

விலையேற்றம் காரணமாக மருந்துகள், உணவு பொருட்கள், மரக்கறிகள், பேக்கரி தயாரிப்புக்கள் என பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. முன்னைய காலங்களில் மஞ்சளை உணவில் பயன்படுத்தியது, கிருமி நாசினியாக பயன்படுத்துவது பற்றி இருந்த மத மற்றும் விஞ்ஞான அறிவு மறக்கப்பட்டிருந்தது. மருந்துகள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடுகள் அதனை மீண்டும் நமக்கு நினைவுபடுத்தியுள்ளது. அதேபோல், இடைவெளி விடுதல், முகக்கவசம் அணிதல், கைகூப்பி வணங்குதல் போன்றவையும் பண்டைய காலத்து மதம் சார்ந்த நம்பிக்கைகளே ஆகும்.

அவசர சூழ்நிலைகள் காரணமாக சிலர் மதம் மாறும் போதும், நம்பிக்கைகளை இழக்கும் போதும் பொறுமை, மன்னிப்பு மற்றும் நம்பிக்கை அதிக மனிதாபிமான குணங்கள் மாற்றம்பெறுகின்றன. ஆனால், நாம் ஒரு விடயத்தை ஆழமாக நம்பும் போதும், பொறுமையுடன் செயல்படும் போதும் அதற்கான பலன்கள் நமக்கு நிச்சயம் உண்டு என்பது நம்பிக்கை. ஒரு தவறினை மனதார உணர்ந்து மன்னிப்பு கோரும் பொழுது மனிதர்களிடம் இல்லாவிட்டாலும் கடவுளிடம் மன்னிப்பு உண்டு என்பது மதரீதியான நம்பிக்கை ஆகும். எனவே, ஒரு மதம் அல்லது நம்பிக்கையை பின்பற்றுவதற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள் மதத்தோடு இணைந்து அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

'நம்மையும், சமூகத்தையும் பாதிக்கும் கொரோனா என்கின்ற வைரஸ் கிருமியை முற்றாக அழித்திடுவோம்'.

முழுப்பெயர் :- செல்வி. நாகராஜா மதிவதனி
வயதுப்பிரிவு :- 27 (16-29)
மின்னஞ்சல் :- nagarajamathimail@gmail.com
தே.அ.அ இல :- 199459703986
2021.09.10 அன்று வயது :- 27 வருடங்கள் 05 மாதங்கள் 16 நாட்கள்